பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் மீதான குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிறுவனப் பொறுப்பு அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இலக்கம் - 79

தாபனத்தின் பெயர் - பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

குழுவினூடாக அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை திருத்தம் செய்வதற்கு தாபனம் எடுத்துள்ள நடவடிக்கை/ தற்கால நிலைமை
முதலாம் பகுதி	
2004.05.11 தினத்தன்றான இலக்கம் 171/2004 கொண்ட அரசாங்க கணக்கு சுற்றறிக்கையின்படி அரசாங்க சம்பளங்களை தயாரித்தல் கணணி மென்பொருளுக்குரிய முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொல் மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றப்பட்டிருக்கவில்லை.	அரசாங்க சம்பளங்களை தயாரிக்கும் கணணி மென்பொருக்குரிய முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொல் மூன்று மாதத்திற்கொரு முறை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
காப்பு வாகனங்களுக்காக நாளாந்த செலுத்தல் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கை கணக்காய்வாளரிடம் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	காப்பு வாகனங்களின் நாளாந்த குறிப்புக்கள் உள்ளக கணக்காய்விற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் கணக்காய்வாளரிடம் அனுப்புவதற்காக தற்போது செலுத்தற் குறிப்புக்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.
அனைத்து வாகனங்களினதும் அரசாங்க இலட்சினை வரையப்பட்டிருக்கவில்லை.	அமைச்சிடம் உள்ள வாகனங்களில் சிலவற்றில் அரசாங்க இலட்சினை வரையப்படாததுடன் தற்போது அவ் வாகனங்களின் அரசாங்க இலட்சினையை வரைவதற்கான பணிகள் தயார் செய்யப்பட்டு வருகின்றது.
மானியங்களின் எல்லையினைத் தாண்டி செலவு செய்யப்பட்டிருந்தது.	2022 வருடத்தில் காத்துர் அடிப்படையின் மீது மானியங்களை பிரித்ததுடன் 2022 ஒக்தோபர் மாதத்தில் சுதேச அலுவல்கள் பிரிவு 409 வருடாந்த அறிக்கையிலிருந்து 130 வருடாந்த அறிக்கையிடம் 2022.10.01 ஆம் தினத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. அதன்படி 2021 இல. 30 கொண்ட சட்டத்திற்குரிய வருடாந்த அறிக்கை மற்றும் செலவு விடயங்களின் கீழ் 2022.01.01 இருந்து 2022.09.30 வரை 409 தலைப்பின் கீழ் செய்யப்படும் செலவுகள் 130 புதிய தலைப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது. அங்கு 2022 ஒக்தோபர் மாதத்தில் மானியங்களைத் தாண்டி செலவுகளை கொண்டுள்ளதுடன் திறைசேரி அச்சிடப்பட்ட பிரதிகளின் ஊடாக காட்டப்பட்டாலும் அது 2022 வருட இறுதி காலாண்டிற்குள் சரி செய்வதற்கு செயலாற்றப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒரு வருடத்திற்கும் அதிகமான காலத்திலிருந்து நிலவி வரும் நிலுவை கடன்தொகை நிலவியது.	2024.05.29 தினத்தன்றான அரசாங்க நிதி சுற்றறிக்கை 01/2024 இன் 04 ஆம் இடைக்கால ஏற்பாடுகளின் பிரகாரம் சட்ட ரீதியான பணிகள் ஆரம்பிக்காததுடன், கடன் நிலுவை தவிர பிரதான கணக்கு வழங்கும் உத்தியோகத்தரின் எல்லைக்குள் இன்னும் அறவிட முடியாதபடி அடையாளம் கண்டுள்ள கடன் நிலுவை, பிரதான கடன் கொடுக்கும் உத்தியோகத்தரின் மூலம் அனுமதியைப் பெற்று கைவிடுவதற்கும், உரிய அளவெல்லையை மீறிய கடன் நிலுவையை கைவிடுவதற்காக திறைசேரிக்கு செலுத்துவதற்கு கருமாற்றப்பட்டுள்ளதுடன் ஏனைய கடன் நிலுவைகள் தற்போது அறவிடப்பட்டு வருகின்றது. அத்தோடு, சட்ட ரீதியான கருமங்களை ஆரம்பித்துள்ள கடன் தொடர்பில் அவ் ஆலோசனைகளின்படி கருமாற்றப்பட்டு வருகின்றது. **<u>மாவட்ட செயலாளர் காரியாலயம்</u>** மிகுதியாக உள்ள கடன் நிலுவையாக பதுளை மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் ரூ.13, 891.50 கடன் நிலுவை உத்தியோகத்தர்கள் நான்கு பேருக்கு உரியதுடன் அவ் உத்தியோகத்தர்கள் 2015 வருடத்தில் தேசிய பொருளாதார மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிடம் இணைத்துக் கொள்ளப்பட்டு பின்னர் அடிக்கட்டுமான மற்றும் அபிவிருத்தி அமைச்சிடம் இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் தவணையை அறவிடல் 104011 தலைப்பிற்கு செலவு வைத்துள்ளதுடன் பின்னர் மிகுதியாவுள்ள கடன் நிலுவையினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கடன் நிலுவையை தீர்த்தமையினால், இவ் பிணக்கு ஏற்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உரிய திருத்தங்களை செய்வதற்கான பணிகள் நடைபெறுகின்றதென்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். அத்தோடு, ரூ. 17500 இனது கடன் நிலுவையொன்று உத்தியோகத்தர்கள் இருவருக்கு உரித்தாவதுடன், அவ் உத்தியோகத்தர்கள் இருவரும் 2015 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுள்ளதுடன் 2016 ஆம் வருடத்தில் கடன் நிலுவையை தீர்க்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சின் செலவு நிலுவை மாறியமையினால் செலவு செய்ய வேண்டிய செலவு தலைப்பு பிரச்சினைக்குள்ளாகியுள்ளதுடன் பின்னர் விவசாய அமைச்சின் ஊடாக ரூ. 6250.00 படி ரூ. 12500 அறவிட்டு அரசாங்க வருமானத்திற்கு வரவு வைத்துள்ளதுடன் மீண்டும் அவ் தவணை அரசாங்க வருமானத்தில் அறவிட்டு தீர்க்கப்படும் என அறியத்

	தரப்பட்டுள்ளது என தயவுடன்தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் ரூ. 403,582 கடன் நிலுவை நான்கு உத்தியோகத்தர்களுக்கு உரியதாவதுடன், அவ் கடன் நிலுவை தீர்ப்பது கண்டி மாவட்டக் காரியாலயத்தின் ஊடாக நடைபெற வேண்டியதுடன், அவ் தீர்வை செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என பதுளை மாவட்டச் செயலாளர் காரியாலயம் மூலம் தெரியப்படுத்தியுள்ளமையை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ரத்னபுரி மாவட்ட செயலாளர் காரியாலயத்திற்கு உரிய ரூ. 94,684.00 கடன் நிலுவை, 2015 ஆண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் சேவை புரியும் உத்தியோகத்தர்களின் கடன் நிலுவையாகும். அப்போது அமைச்சரவை மாறியதன் காரணமாக, அனைத்து உத்தியோகத்தர்களும் மலைநாட்டு புதிய கிராம அடிக்கட்டுமான வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சிடம் இணைக்கப்பட்டுள்ளது. அங்கு மலைநாட்டு புதிய கிராம வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கிடையில் கடன் நிலுவையை செலுத்தும் போது ஏற்பட்ட தவறினால் கடன் நிலுவைக்கிடையில் வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் மூலம் தெரியப்படுத்தியுள்ளதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் தோட்ட வசதிகள் அபிவிருத்தி பிரிவின் கீழ் தற்போது பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்களின் மற்றும் இடமாற்றம் பெற்று சென்றுள்ள உத்தியோகத்தர்களின் புதிய சேவை நிலையங்களுடன் தொடர்புறுத்தி விரைவாக தீர்வை எட்டவென செயலாற்றும்படி ரத்னபுரி மாவட்ட செயலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதென்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். கிளிநொச்சி மாவட்ட செயலாளர் காரியாலயத்தில் ரூ. 158,420 மற்றும் ரூ. 79,700 ஆகிய இரண்டு கடன் நிலுவைகள் உள்ளதுடன, அதில் 158,420 நிலுவையில் ரூ. 13,000 நிலுவை அறவிடப்பட்டுள்ளதுடன் மிகுதி நிலுவையை அறவிடுவதற்காக பொலிஸ் முறைபாடொன்றுக்கு முன்வைக்கப்பட்டுள்ளதை அறிய அனுப்பப்பட்டுள்ளது. அத்தோடு, ரூ. 79,700 கடன்

	நிலுவைக்குரிய உத்தியோகத்தர் வெளிநாடு சென்றுள்ளதால் தேவையான உரிய தகவல்களை விசாரித்து, குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திடம் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
இரண்டாம் பகுதி	
சகல காரியாலய குழுவினரும் உட்பட செயலாற்றுகை உடன்படிக்கை தயாரித்து உடன்படிக்கை காணப்படவில்லை.	அனைத்து காரிய குழுவினரும் உள்ளடங்கலாக செயலாற்றுகை உடன்படிக்கை தயார் செய்வதற்கு தேவையான முன் நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகின்றது.
தாபனத்தின் கணக்குகள் தொடர்பில் கணக்காய்வு மீது பொறுப்புத்துறப்பு கருத்து மட்டத்தில் அல்லது பொருத்தமில்லாத மட்டத்தில் இருக்கலாம்.	அமைச்சின் கணக்காய்வு கருத்து நிலைமாறுகை கருத்தாகும். வருமான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் என்பதுடன் ஏனைய தாபனங்களில் வருமான கணக்குக்கு நடைபெறும் நிதி கொடுக்கல்வாங்கல்களில் நிலவும் குறைப்பாடுகள் காரணமாக அமைச்சின் கணக்காய்வு கருத்து நிலைமாறுகை செய்யப்பட்டுள்ளதென அறியத் தருகின்றேன்.
கணக்காய்வாளர் அறிக்கையின் பரிந்துரைகள் செயற்படுத்தியிருக்கவில்லை.	2024 ஆம் வருடமாகும் போது இவ் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
அனைத்து உத்தியோகத்தர்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.	அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் சொத்துக்களும் பொறுப்புக்களுக்குமான பிரகடனத்தை முன்வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளதோடு, அது தொடர்பில் அடிக்கடி பின் விபரங்கள் செய்யப்படும்.
அதிகபட்ச காலத்தை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் முறையானபடி இடமாற்றம் செய்து அனுப்புவதற்கு கருமாற்றப்பட்டிருக்கவில்லை.	2022 ஆண்டாகும் போது நாட்டில் எழுந்த பொருளாதார நெருக்கடியின் விளைவாக வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்காத உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்காததுடன் விண்ணப்பம் செய்த உத்தியோகத்தர்களுக்காக முடிந்தளவு தூரம் இடமாற்றத்திற்கான பெரும்பாலான காரணங்களை கவனம் செலுத்தி அவற்றை பொருத்தி இடமாற்றங்கள் வழங்குவதற்கு செயலாற்றப்பட்டது. மேலும், அநேகமான

	சேவை நிலையங்கள் கொழும்பை மையப்படுத்தி அமைந்துள்ளமை, தற்கால பொருளாதார நெருக்கடியினால் உத்தியோகத்தர்களின் வதிவிட பிரதேசங்களுக்கு அருகில் சேவை நிலையம் அல்லது சிறந்த சேவை நிலையத்திற்கு விண்ணப்பித்தல் மற்றும் ஐந்து வருடம் பூர்த்தி செய்த போதிலும் சில தாபனங்களுக்கு வருகைதர எந்தவொரு உத்தியோகத்தரும் இணக்கம் தெரிவிக்காமை போன்ற காரணங்களின் மீது இடமாற்றம் செய்வது கடினமாகியுள்ளது. எனினும், முடிந்தளவில் மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களையும் கருத்திற் கொண்டு, வருடாந்த இடமாற்றம் கோரியுள்ள மற்றும் ஐந்து வருட காலத்தை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களுக்காக இடமாற்றம் பெற்றுக் கொடுப்பதற்கு செயலாற்றப்பட்டுள்ளது. மேலும், 2025 வருடாந்த இடமாற்றத்தினை பெற்றுக் கொடுக்கும் போது, அவ்வாறு செயலாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை இதுவரையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எஸ். ஆலோக பண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பதிவாளர் நாயகம் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் மீதான குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிறுவனப் பொறுப்பு அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 79

திணைக்களம் - பதிவாளர் நாயகம் திணைக்களம்

	அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்	தற்போதைய முன்னேற்றம் (2022 நிதி ஆண்டு)
1	பாவனைப்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்படவில்லை.	பாவனைப்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.
2	இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்படவில்லை.	கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அடிப்படையாக கொள்வதற்கு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2022/2023 ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
3	கணக்காய்வாளரினால் எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை.	முடியுமான அளவு தாமதம் இன்றி பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
4	உள்ளக கணக்காய்வுகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டன.	உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய திகதியில் பதில் அளிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5	2017.06.26 ஆம் திகதிய இல 1/2017 எனும் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்ளை கொம்ப்ட்ரோலர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படும்.
6	வருடாந்தபொருள் சுற்றாய்வின் போது கண்டறியப்பட்ட மிகை, குறைபாடு பற்றிய சிபாரிசுகள் உரியகாலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	உரிய காலப் பகுதியில் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

எஸ். ஆலோக பண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றுகை செயலணித் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் மீதான குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிறுவனப் பொறுப்பு அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் - 79

நிறுவனத்தின் பெயர் - பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றுகை

செயலணித் திணைக்களம்

	குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நிறுவனத்தால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்/தற்போதைய நிலை
முதல் பகுதி		
01	சிகாஸ் திட்டத்தின் நிலையான சொத்துகள் தொகுதி இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்படவில்லை	நிலையான சொத்துகள் தொகுதி திணைக்களத்தினால் வாங்கப்பட்ட நிலையான சொத்துக்கள் முறையாக இற்றைப்படுத்தப்பட்டு பராமரிக்கப்பட்டதோடு ஏனைய திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட சொத்துக்கள் மட்டுமே புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024/06/05 ஆம் திகதி திணைக்களத்தினைக் கலைக்கும்போது, திணைக்களத்திடமிருந்த அனைத்து நிலையான சொத்துகளும் வேறுஅமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.
02	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் பந்தி 11.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள், நி.ஒ 756 (6) இன் படி பொருட்களை அளவீடுசெய்து குறித்த திகதிக்குரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. வருடாந்த பொருட்களின் அளவீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள், குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் ஆண்டு பொருட்கள் அளவீட்டுச் சபை நியமிக்கப்பட்டு, குறித்த ஆண்டின் டிசம்பர் 31ஆம் திகதி பொருட்களின் அளவீட்டை மேற்கொண்டிருப்பினும், மாகாண அலுவலகங்களில் பொருட்களின் அளவீட்டு அறிக்கையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, குறிப்பிட்ட திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்க முடியவில்லையாயினும், அந்தத் திகதிக்குப் பின்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய பொருட்களின் அளவீட்டில் கண்டறியப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் குறித்து, திணைக்களத் தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உரிய நீக்கங்கள் மற்றும் ஏலங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்துள்ளன.
03	அனைத்து வாகனங்களிலும் அரச இலட்சினை வர்ணம் தீட்டப்பட்டிருக்கவில்லை. வாகனமொன்று பாவனைக்குதவாது 8 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்பட்டிருக்கவில்லை. அரசாங்க வாகன விபத்துகள் குறித்து, நி.ஒ விதிகளின் படி முறையான நடவடிக்கைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்குச் சொந்தமாக இருந்த இரண்டு வாகனங்களிலும் அரச இலச்சினை வர்ணம் தீட்டப்பட்டிராததோடு 2024/06/30 ஆம் திகதி திணைக்களம் கலைக்கப்பட்டவுடன், அந்த வாகனங்கள் வேறு திணைக்களங்களுக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளன. மீளாய்வுக்காலப்பகுதியில் வாகன விபத்துக்கள் அல்லது பாவனைக்குதவாமை எதுவும் பதிவாகியிருக்கவில்லை

04	நி.ஒ 94(1) விதிகளின் படி செலவு விடயத்திற்கு வழங்கியுள்ள மானியங்களை பயன்படுத்திய பின்னர் வருடத்தின் இறுதியில் மிகுதியான மானியங்களை எல்லை மீறும் வகையில் வரவுகளுக்கு வந்திருந்தது.	கலந்துரையாடப்பட்ட வருடத்தின் மானியங்களின் மட்டுப்பாடுகள் காரணமாக தொலைபேசி மற்றும் மின்சாரத்திற்கான பயனுடையின் பற்றாக்குறைக்காக அத்தகைய கட்டுறுத்துக்களுக்கு வருவதற்கு வேண்டியிருந்தது. அதன் பின்பு நி.ஒ 94(1) படி செயலாற்றுவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.
இரண்டாம் பகுதி		
05	பொதுமக்களின் ஊடாக கோரப்படும் தகவல்களை பெற்றுக் கொடுத்தல் / பெற்றுக் கொடுக்காமை தொடர்பில் விபரங்களை உள்ளடக்கிய ஆவணமொன்றினை நடாத்தியிருக்கவில்லை. கோரப்படும் தகவல்களை வழங்காமை தொடர்பில் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் ஆவணப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை தெளிவுபடுத்தும் ஆவணங்களை கொண்டிருக்கவில்லை. நிறுவனம் தொடர்பில் பொதுமக்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்காக இணையப் பகுதியொன்றினை உருவாக்கி நடத்திச் செல்லவில்லை. நிறுவனம் தொடர்பில் நடத்திச் செல்லும் இணையப்பகுதி மூலம் பொதுமக்களின் முறைப்பாடு அல்லது பாராட்டுக்களை குறிப்பீடு செய்தலுக்கான சந்தர்ப்பத்தினை வழங்கியிருக்கவில்லை.	இவ் திணைக்களம் 2021 வருடத்தில் விசேட திட்டமாக ஆரம்பிக்கப்பட்டதுடன், இணைத்துக் கொள்ளப்பட்ட பயிற்சி உதவியாளர்களை 6 மாதத்திற்குள் பயிற்சி வழங்கி, நிரந்தர அரசாங்க சேவைக்குக்கு நியமிக்க நோக்காகக் கொண்டமையினால் அச்சந்தர்ப்பத்தில் பாரிய பணம் கொண்டு இணையப் பக்கமொன்றினை உருவாக்குவது நடைபெறவில்லை. இணையத்தளமொன்று இல்லாத போதும் பிரதேச செயலாளர் காரியாலயத்தினூடாக அச்சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி உரிய செயலினை வெற்றிகரமாக நடாத்திச் சென்று பயிற்சி உதவியாளர்களை இற்றைவரையிலும் 28000 பேர்களை நிரந்தர வேலைக்குள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.
06	பிரஜைகள்/ சேவைபெறுநரின் பிரகடனம் சரியான முறையில் ஒழுங்குபடுத்தி செயற்படுத்தியிருக்கவில்லை. நிறுவனத்தின் பிரஜை/ சேவைபெறுநரின் பிரகடனம் செயற்படுத்துவது தொடர்பில் அவதானிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக முறையான முறைமைகளை உருவாக்கியிருக்கவில்லை.	சேவைபெறுநரின் பிரகடனம் தயாரித்து இருந்த போதிலும், அதனை காட்சிப்படுத்தியிருக்கவில்லை. மேலும், திணைக்களத்திற்கு வெளியக சேவைபெறுநர்களுக்கு சேவையினை பெற்றுக் கொள்வதற்கு தேவையொன்று உருவாகியிருக்கவில்லை என்பதினால் அது தொடர்பாக முதன்மைதானம் வழங்கப்பட்டிருக்கவில்லை. அனைத்து பணிகள் தொடர்பாக திணைக்களத்தில் தகவல் பொறிமுறையொன்றினை நடாத்திச் செல்வதுடன், நாடு பூராகவும் அனைத்து பிரதேச செயலாளர் காரியாலயம், மாவட்ட செயலாளர் காரியாலயம் மற்றும் மாகாண காரியாலய தொடர்பாடலில் இவ் பணிகளை பரீட்சித்து முறைமையாக நடாத்திச் செல்லல்.

07	2018.01.24 திகதிய இலக்கம் 02/2018 கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி முறையாக தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டமிடல் மூலம் காரியாலய குழுவில் 50% அதிகமான பேருக்கு வருடத்திற்கு குறைந்தபட்சம் 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பத்திற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு தினம் வரையில் மனிதவளங்கள் திட்டமிடல் தயார்படுத்தி இருக்கவில்லை என்பதுடன், பின்னர் அனைத்து வருடங்களுக்கும் உரிய மனிதவளங்கள் திட்டமிடலை அமைச்சிடம் அனுப்பப்பட்டது. திணைக்களம் ஆரம்பத்திலேயே பாரிய செலவொன்றினைச் செய்து, அனைத்து உத்தியோகத்தர்களுக்காக ரன்டம்ப மாணவர் பயிற்சி நிலையத்தில் பயிற்சியொன்று வழங்கப்பட்டது. அதனால் அடுத்த வருடம் கிடைக்கப் பெற்ற மானியங்கள் போதுமானதாக இருக்கவில்லை என்பதினால் அனைத்து உத்தியோகத்தர்களுக்கு அதனை வழங்குவதற்கு திறனிருக்கவில்லை.
08	அனைத்து காரியாலய குழுவினரும் உட்பட காரியாலய செயலாற்றுகை உடன்படிக்கை தயார் செய்து உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.	உரிய காரியாலய செயலாற்றுகை உடன்படிக்கையை தயார் செய்யப்பட்டிருக்காததுடன், இற்றை வரையிலும் திணைக்களத்தின் செயற்பாடுகள் முடிவு செய்யப்பட்டுள்ளது.
10	மனிதவள அபிவிருத்தி திட்டங்களை தயார் செய்வதும், கொள்ளளவு மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு சிரேஷ்ட உத்தியோகத்தரொருவரை பெயர் குறித்திருக்கவில்லை. திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த பயிற்சி சந்தர்ப்பங்களின் அளவு 50% ற்கு குறைந்த மட்டத்தில் நிலவியது.	முதன்மை உதவியாளர் தொடர்பில் வழங்கியதுடன், அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படவில்லை. பல்நோக்கு உதவியாளர்கள் 100,000 பேரை இணைத்துக் கொள்வதற்கு நோக்காகக் கொண்டு இருந்ததுடன், பயிற்சி வாய்ப்புக்களுக்காக 100,000 மானியங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும் பல்நோக்கு உதவியாளர்கள் 38,000 மட்டும் இணைத்துக் கொள்ளப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

எஸ். ஆலோக பண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : அரசகரும மொழிகள் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டு இலக்கம் 79

திணைக்களம் - பதிவாளர் நாயகம் திணைக்களம்

	அரச கணக்குகள் குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள்	தற்போதைய முன்னேற்றம் (2022 நிதி ஆண்டு)
1	பாவனைப்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்படவில்லை.	பாவனைப்பொருட்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.
2	இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்ட நிலையில் பேணப்படவில்லை.	கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அடிப்படையாக கொள்வதற்கு முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் 2022/2023 ஆண்டுகளுக்கு ஏற்புடையதாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
3	கணக்காய்வாளரினால் எழுப்பப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை.	முடியுமான அளவு தாமதம் இன்றி பதில் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
4	உள்ளக கணக்காய்வுகளுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டன.	உள்ளக கணக்காய்வு விசாரணைகளுக்கு உரிய திகதியில் பதில் அளிப்பதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
5	2017.06.26 ஆம் திகதிய இல 1/2017 எனும் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் பற்றிய தகவல்ளை கொம்ப்ட்ரோலர் நாயகம் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்படும்.
6	வருடாந்தபொருள் சுற்றாய்வின் போது கண்டறியப்பட்ட மிகை, குறைபாடு பற்றிய சிபாரிசுகள் உரியகாலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.	உரிய காலப் பகுதியில் சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.
7	அனைத்து வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்படவில்லை.	தற்போது அந்தப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

8	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணப்படவில்லை.	அனைத்து வாகனங்களுக்கும் லொக் புத்தகங்கள் இற்றைப்படுத்தி பேணிவரப்படுகின்றன.
9	விபத்துக்குஉள்ளாகும் அரச வாகனங்கள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	விபத்துக்கு உள்ளாகும் அரச வாகனங்கள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
10	நி.ஒ. 94(1) பிரகாரம் செலவினத் தலைப்புக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் வருடத்தின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளைவிட கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்.	திறைசேரியிலிருந்து போதியளவு நிதி ஒதுக்கீடு பற்றாக்குறை காரணமாக இந்த நிலமை தோன்றியுள்ளது.
11	ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் கடன் மீதிகள் காணப்பட்டன.	வசூலிக்க முடியுமான கடன் மீதிகள் அறவிடப்படுகின்றன. வசூலிக்கமுடியாத கடன் நிலுவைகளை 2024.05.29 ஆம் திகதிய அ.நி.சு. 01/2024 பிரகாரம் தள்ளுபடி செய்வதற்கான முறையான ஒப்புதலைப் பெறுவதற்கும், ஆண்டு இறுதிக்குள்அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
12	பொதுவைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ..571ன் படி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	பொதுவைப்புக் கணக்கில் உள்ள காலதாமதமான வைப்புக்கள் குறித்து, நி.ஒ..571ன் பிரகாரம்நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
13	நி.ஒ. 371 பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த உப கட்டுநிதி தொடர்பில் பணி நிறைவடைந்து ஒருமாத்த்திற்குள் தீர்க்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டில் உரிய பணி நிறைவடைந்து ஒரு மாத்த்திற்குள் தீர்க்கப்படுகின்றன.
14	அனுமதிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி ஆளணி ஆட்சேர்க்கப்பட்டுள்ளது.	அரச சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சில அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இந்த திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர் மேலும் அந்த உத்தியோகத்தர்களை திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களுடன் இணைத்து அங்கீகாரம் வழங்குமாறு பொது நிர்வாக அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பகுதி

1	கோரப்பட்ட தகவல்களை வழங்காதது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான பதிவேடுகள் பராமரிக்கப்படவில்லை.	உரிய பதிவேடு பேணப்படுகின்றது.

2	நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் பொதுமக்கள் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ பதிவு செய்ய அனுமதிக்கவில்லை.	இணையத்தளம் பொதுமக்களுக்கு விசாரணைகள், புகார்கள், ஆலோசனைகள் மற்றும் பாராட்டுகளைப் பதிவு செய்ய பொருத்தமான தொழில்நுட்ப நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது. அதன்படி, பொது விசாரணைகள், புகார்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு ஒரு குறிப்பு (விசாரணை, புகார்கள் மற்றும் பரிந்துரைகள் படிவம்) உள்ளது, இதன் மூலம் பொது குறிப்புகள் மின்னஞ்சல் மூலம் பெறப்படுகின்றன. இந்த வசதி மூன்று மொழிகளிலும் வழங்கப்பட்டுள்ளது.
3	நிறுவனத்தின் பிரஜைகள் பட்டயத்தை செயல்படுத்துவதற்கு மற்றும் கண்காணிப்பதற்கு அல்லது மதிப்பீடு செய்ய எந்த அமைப்பும் இல்லை.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
4	அனைத்து ஆளணியினருக்கும் செயலாற்றுகை ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்படவில்லை.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
5	நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வின் அபிப்பிராயம், கீழ் மட்டத்தில் / மறுக்கும் மட்டத்தில் / பாதிப்பான மட்டத்தில் காணப்பட்டது.	நிறுவனத்தின் நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வு அபிப்பிராயத்தை சாதகமான மட்டத்தை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
6	அனைத்து உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை சமர்ப்பிக்கவில்லை.	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை வழங்கியுள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் வழங்காத உத்தியோகத்தர்களின் பட்டியல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுக்கு 2024.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

....

எஸ். ஆலோக பண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : அரச கரும மொழிகள் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் மீதான குழுவால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ நிறுவனப் பொறுப்பு அமைச்சரின் அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்

பாராளுமன்ற தொடர் இலக்கம் : 79

நிறுவதைதின் பெயர் : ஓய்வதியத் திணைக்களம்

குழுவால் கண்டறியப்பட்ட குறைபாடுகள்	குறைபாடுகளை சரிசெய்ய நிறுவனம் எடுத்த நடவடிக்கை / தற்போதைய நிலையை
பகுதி 01 1.) கணக்காளர் நாயகத்தால் எழுப்பப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்களை சமர்ப்பிக்காதமை	கணக்காய்வாளர் நாயகத்தினால் அனுப்பப்படும் கணக்காய்வு ஐய வினாக்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அவற்றை மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு அறிவித்து, அவர்களிடமிருந்து அவ் ஐய வினாக்களுக்கான விளக்கங்கள் மற்றும் பதில்கள் ஆகியவற்றைப்பெற்று, பதிலளிப்பதில் தாமதம் காணப்படுகிறது என்பதால் அவற்றுக்கான பதில்களை வழங்குவதற்கு குறிப்பிடத்தக்க கால தாமதம் ஏற்படுகின்றது. அத்தகைய நிலைமைக்கான காரணங்கள் பின்வருமாறு. i. கணக்காய்வு வினாக்களுகான முழுமையான பதிலைச் சமர்ப்பிக்கும் முன்னர் பிரதேச செயலகம் தொடர்பாக வழங்கப்படும் ஒவ்வொரு கணக்காய்வு வினாக்களையும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்திற்கு அனுப்புவது அவசியமாகும் அதேவேளை, ஓய்வூதியத் திணைக்களத்தினால் பெறப்பட்ட கணக்காய்வு வினாக்கள் சம்பந்தப்பட்ட பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ii. கணக்காய்வு வினாவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு குறைகளையும் குறுகிய காலத்திற்குள் நிவர்த்தி செய்யுமாறும், பதில்களை அனுப்பும் போது சரிபார்ப்பதற்குத் தேவையான ஆவணங்களுடன் அனுப்புமாறும் பிரதேச செயலர்களுக்கு முதலில் தெரிவிக்கப்பட்டுள்ளதால், திருத்தங்களுக்கு கணிசமான கால அவகாசம் தேவைப்படுகின்றது. iii. ஓய்வூதியரின் மரணம் அல்லது வேறு ஏதேனும் காரணங்களாலும் மற்றும் வேறுபிற காரணங்களாலும் ஏற்படும் ஓய்வூதிய மிகைக்கொடுப்பனவுகள் பற்றிய விவரங்களை கோரிப்பெற்று அவற்றை கணக்காய்வு வினவிற்கான பதிலில் சேர்க்க வேண்டும். iv. ஓய்வூதியர்களுக்கான தரவுத் தளம் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களுடன் ஒப்பிடுகையில்

	கொடுக்கப்பட்ட பதில்களின் துல்லியம் குறித்து மேலும் சரிபார்க்க வேண்டயேதாக இருந்தாலோ, மேலும் கேள்விகள் இருந்தாலோ, வட்ஸ் அப், மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலம் தகவல்களைச் சேகரிக்கலாம். v. ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பாக வழங்கப்பட்ட பெரும்பாலான கணக்காய்வு வினாக்களுக்கு தேவையான திருத்தங்களைச் செய்து குறுகிய காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கணக்காய்வாளர் நாயகம் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகியோரின் கணக்காய்வு வினாக்களுக்கான பதில்களை வழங்குவதில் தாமதம் ஏற்படுவது குறித்து அமைச்சு மற்றும் திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டதுடன், மேலும் சரியான முறையில் பதில்களை வழங்க வேண்டும் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். மேற்கூறியவற்றைத் தவிர, மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் பங்கேற்கும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் பிரதிநிதிகள் மூலம் மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் கூட்டங்களில் இந்த விடயங்களைப் பற்றி விவாதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இடைக்கால பதில்கள் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளது.
2.) உள் கணக்காய்வு ஐய வினாக்களுக்கான பதில்களை ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்காமை.	2022 ஆம் ஆண்டிற்கான 11 உள் கணக்காய்வு ஐயவினாக்கள் எழுப்பப்பட்டுள்ளன. ஐயவினாக்கள் பெறப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிவதற்குள் 09 வினாக்களுக்கான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன, மற்ற 2 வினாக்களுக்கான பதில்கள் 4 மாதங்களுக்குப் பின்னரே பெறப்பட்டன. எவ்வாறாயினும், அனைத்து வினாக்களுக்கும் 2023 ஜனவரி 3 ஆம் திகதிக்கு முன்னர் பதிலளிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, கணக்காய்வு வினாக்களுக்கு உடனடியாக பதில் அளிக்குமாறு பிரதேச செயலாளர்கள் மற்றும் அந்தந்த மாவட்ட

	செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
3). நிபி 371 இன் படி பணி முடிந்ததிலிருந்து ஒரு மாதத்திற்குள் இடைக்கால முற்பண ஒதுக்கீட்டை தீர்க்காமை	2022 ஆம் ஆண்டில், துறைசார் நடவடிக்கைகளைத் தொடர செலவழிக்கும் எரிபொருளுக்காக இடைக்கால தற்காலிக ஒதுக்கீடு பெறப்பட்டது. இந்த காலகட்டத்தில், எரிபொருள் பற்றாக்குறை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக சில நேரங்களில் எரிபொருளைப் பெறுவதற்கு பல நிறுவனங்கள் மூலம் மிகவும் கடினமான மற்றும் நீண்ட செயல்முறையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பின்னர் அந்த முன்பணத்தை கொடுத்துத் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டது. ஆனால், பணி முடிந்தவுடன், பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பை அறிமுகப்படுத்தியவுடன், முன்பணத்தை கொடுத்துத் தீர்க்குமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டில், நிபி 371 இன் படி தொடர்புடைய பணி முடிந்த ஒரு மாதத்திற்குள் அனைத்து இடைக்கால தற்காலிக முன்பணங்களும் தீர்க்கப்பட்டுள்ளன.
<u>பகுதி 2</u> <u>6). குறைந்தபட்சம் 24 ஜனவரி 2018 திகதியிட்ட 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகத்தின் சுற்றறிக்கையின்படி மனித வளத் திட்டத்தைத் தயாரிக்காமை</u>	24.01.2018 திகதியிட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2018இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான மனித வளத் திட்டம் தயாரிக்கப்படாவிட்டாலும், திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கோவிட் 19 தொற்றுநோய் காரணமாக இயங்கலை முறை மூலம் திணைக்கள அலுவலர்களின் பயிற்சி தேவைகளைப் பொறுத்து பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட ஏனைய அரச அலுவலகங்களில் சேவையாற்றும் ஓய்வூதிய விடயப் பொறுப்பில் உள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்துடன் இணைந்த மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் நலனுக்காக 2023ஆம் ஆண்டில் 14இணையவழிப் பயிற்சித் திட்டங்கள் உட்பட 19பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. அத்தகைய நிகழ்ச்சி திட்டங்களில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை 5,.127 மேலும், விடயத்தின் தேவைக்கேற்ப 20பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களில் திணைக்கள அலுவலர்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. திணைக்கள அலுவலர்களை வளவாளர்களாக ஈடுபடுத்தி பல்வேறு அரச நிறுவனங்களில்

	ஓய்வூதியம் வழங்குவது தொடர்பான 22பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு 2023ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டின் தேவைகளுக்கு ஏற்ப 27 பயிற்சி திட்டங்களை உள்ளடக்கிய ஒரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

....

எஸ். ஆலோக பண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு